முதல் தர வாய்க்கால் என்றால் ஆண்டு பூராவும் தண்ணீர் போகும் வாய்க்கால். இது இரண்டாம் தர வாய்க்காலாக இருக்கிறது, இதை மூன்றாம் தரம், நான்காம் தரம் என்று ஆக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விட்டு இருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இது முதல்தரமான வாய்க்கால் இல்லை என்று சொல்கிறார்கள். நந்தியாறு வாய்க்கால், ஐயன்வாய்க்கால போன்ற இடங்களில் 11 மாதம் தண்ணீர் விடப்படுகிறது. ஆனால் புள்ளம்பாடியில் 4 மாதம் தான் தண்ணீர் விடப்படுகிறது. இதிலே 11 மாதத்திற்கு தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டப்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 94 அடி தண்ணீர் இருக்கிறபோதுதான் இதற்குத் தண்ணீர் விடவேண்டும் என்று சட்டம் இருக்கிறது, 94 அடி தண்ணீர் இருக்கிறபோது தண்ணீர் விடுகிறகாரணத்தால் இதை முதல் தரம் என்று ஆக்குவதற்கு இயலாது என்று கருதப்படுகிறது. இருந்தாலும் அரசு பரிசிலனை செய்து ஆவன செய்யும்.

திண்டுக்கல் பஞ்சாயத்து ஒன்றிய பள்ளிகளில் வழங்கப் பெற்ற மதிய உணவு

* வினா எண். 607—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஏப்ரல் 3-வது வாரத்தில் திண்டுக்கல் பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளிகளில் மதிய உணவு உட்கொண்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டு இருவர் மரணமடைந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) பள்ளி மதிய உணவு காரணமாக அக்குழந்தைகள் இறந்ததாகத் தெரியவில்லை. எனினும் மனிதாபிமான அடிப்படையில் அக்குழந்தைகளின் தந்தைக்கு முதலமைச்சர் அவர்கள் தமது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2000 உதவிப் பணம் வழங்கியுள்ளார்.